# 5
# மருத்துவர் வீட்டில் அமைச்சர்

மருத்துவர்: வாங்க, வாங்க! நீங்க ஆரு?

அமைச்சர்: கல்வி அமைச்சர் நான்! கண்ணா தெரியலே?

மருத்துவர்: வாங்க வாங்க! நீங்கதானா? என்ன சேதிங்க?

அமைச்சர்: இன்ன நோயிண்ணே இன்னும் புரியலே. கையைப் பாருங்க கருத்தா!

[மருத்துவர் நாடியைப் பார்க்கிறார்.]

மருத்: தானே வந்த நோய் அல்ல. தேடி நீங்க சேத்த நோய் தானுங்க.

அமைச்: இந்த நோய்க்குப் பேர் இன்னதிண்ணில்லியா?

மருத்: இருக்ற குறிப்பே எடுத்துச் சொல்றேன். நாக்லே துடுக்கு, நடையிலே பதறல், மூக்லே எரிச்சல், முன் தொடை நடுக்கம், கண்ணிலே கொஞ்சம் கசப்பான தோற்றம். இருக்குதா, இல்லையா?

அமைச்: இருக்குதே, இருக்குதே! என்ன பண்லாங்க?

மருத்: இலேசாத் தீந்திடும். இந்த நோய் ஓர் வகைக் காரகத்தாலே கண்டது. சீரகத்தாலே தீரணும் அமைச்சரே!

---

காரகம்: ஒரு நோய். அதுவே கார் அகம் எனப் பிரிந்து கருமையான உள்ளம். அதாவது, தெளிவற்ற உள்ளம் எனப் பொருள்படும்.

சீரகம்: மருந்துச் சரக்கு. அதுவே சீர் அகம் எனப் பிரிந்து உயர்ந்த உள்ளம் எனப் பொருள்படும்.